# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ம் உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon P M G No. H A 50/300 of 1939

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சூஉ] யாழ்ப்பாணம்:- கர ஷு மாசி மீ உஅ உ செவ்வாய்க்கிழமை (11 March 1952) [இல - கக]


## இசை பாடி - - இறைவனை இறைஞ்சுதல்

### எந்தையாரைப்பாடி ஏத்தும் முறை

[ கூட்டுப் பிரார்த்தனையைக் காந்தியடிகள் ஆரம்பித்தார். இலங்கையிற் சிவனடியார்கள் அவ்வண்ணஞ் செய்யத் தொடங்கியுள்ளனர். இந்த இயக்கம் இறைவனருளால் இனிது ஓங்குக ப-ர் ]

மக்கள் அவசியம் அடையவேண்டிய அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றிற்கு உறதுணையாயுள்ளது நல்லொழுக்கமாகும். நல்லொழுக்கம் கடவுள் நம்பிக்கையும் வழிபாடும் உடையோருக்கே சித்திப்பதாகும். கடவுளை வழிபடும் நெறிகள் பலவினுள் இசையுடன் தோத்திரப்பாடல்களை ஓதுதல் உத்தமமானது. சைவசமயத்தவர்களுக்குக் குரவர்களாயிருக்கும் நால்வரும் பண்ணிசையுடன் சிவாலயங்கள்தோறுஞ் சென்று பதிகங்கள் பாடிப் பரமசிவனை வழிபாடு செய்தன்றோ அரும் பெரும் அற்புதங்களை நிகழ்த்தினார்கள்.

வேதங்களில் இசைப்பகுதிப் பாடல்களை பல அமைந்தது சாமவேதம். அந்த வேதத்தை ஓதி அருள் பெற்றோர் பலர். திருக்கைலாசமலையை எடுக்க முயன்ற இராவணன் அம்மலையில் அகப்பட்டு வருந்திய போது வாகீசர் சொற்படி சாமவேதம்பாடி வாளும் நாளும் பெற்றமை பலரறிந்ததன்றோ! பன்னருஞ் சாமகீதம் பரிவுடன் பாடலுற்றான் என்று கம்பரும் சிறப்புடன் கூறி பாடுவார்க்கிரங்கும்பரமன் என்று கூறினாரல்லவா? கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாக என்றும் ஏழிசையாய் இசைப்பயனாய் என்னுடைய தோழனுமாய் மாசுமுரொண்கண் பரவையைத் தந்தாண்டானை என்றும் அவர்கள் கூறியமை இசையுடன் பாடி எவரும் அருள் பெற்று உய்யலாம் என ஊக்கமளிப்பதன்றோ.

ஆளுடையநாயனார் மகா மந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாட்சரத்தை வேய்ங்குழலில் இசையுடன் பாடி மோட்சம் அடைந்தார். பரமசிவன் ஐம்பெருஞ் சபைகளில் நடனமாடும்பொழுது எல்லா இசையுடனும் ஆடுகின்றார். குழலன் கோட்டன் குறும்பலவி யத்தன் என்று முருகக்கடவுளைக் கூறுகின்றமையும், கிருஷ்ண பகவான் வேய்ங்குழல் ஊதுகின்றாரென் பதும் அம்மூர்த்திகட்கு இசையின் மேலுள்ள விருப்பத்தைப் புலப்படுத்துமன்றோ, ஆகலின் யாமெல்லாம் ஆண்டவனைப் பாடி அருள் பெறுவோம். காமக் களிப்பைத்தரும் பாடலைத் தவிர்தல் அவசியம். வீடுகளிலும் கோவில்களிலும் கடவுளைப் பாடும் பாடல்களே ஒலிக்க வேண்டும். உள்ளமாருருகாதவர் ஊர்விடைவள்ளலார் திரு

பண்டிதர்
க. நமசிவாயம் எழுதியது

வாரூர் மருங்கெலாம் தெள்ளுமோசைத் திருப்பதிகங்கள் பைங்கிளி பாடுவ கேட்பன பூவைகள் என்ற வாங்கு தமிழ் நாடு முழுவதும் திகழக் காண்போம்.

## தமிழ் மக்களுட் சமாசம் உண்டுபண்ண ஓரே ஒருவழி!

### ஒழுக்கத்துயர்ந்தவர்கள் - - முன்வந்து முயற்சியுங்கள்!

### சுயநலங்கருதாத் தொண்டர்படையைக் கூட்டுங்கள்

[தமிழர்கள் மாத்திரமன்று அகில உலக மக்கள் அனைவருமே ஐக்கியப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. இல்லையேல் மனித வர்க்கம் சின்னபின்னப்பட்டுச் சிதைந்துபோம். இப் பெரும் இலக்கை அடைவதற்குத் தனித் தனிச் சாதியினர் தம்முள் ஒற்றுமைப்படவேண்டும். எனவே தமிழ மக்கள் பலவேறு கொள்கையினராக வித்தியாசப்பட்டிருக்கும் நிலைமையை மாற்றியமைக்கக் கீழே ஒரு யோசனை கூறப்படுகின்றது. அதை ஆராய்ந்து ஆகவேண்டியது செய்தல் நன்மைபயக்கும் என்பதெங்கள் அபிப்பிராயம். — ப - ர்.]

தமிழ் மக்கள் மிகக் குறைந்த தொகையினர். கட்சிகளின் தொகையோ மிகக் கூடியது. இக்கட்சிப் பிரிவுகளால், தமிழர்களாகிய நாங்கள் எங்களுடைய பண்டை உன்னத வாழ்க்கை நிலையை இழந்து பரிகசத்துக்கிடமான நிலைமையை எய்தி விட்டோம். அண்மையான இறந்த காலத்தில் தலைவர் திலகமாய் வாழ்ந்த சேர். பொன் இராமநாதன் அவர்கள் காலத்தில் இவ்வித இழிந்த நிலையைத் தமிழ் மக்களடையவில்லை. தக்கமையின் தகைமை விளங்காதவர்கள் தலைவர்களாகி மலிந்ததே இந்த இழிவுக்குக் காரணமென முபலர் வருந்துகின்றனர். தமிழ்ப் பெரியோர்களே சகோதர சகோதரிகளே நாங்கள் இந்த நிலைமையைப் பார்த்து வாளாவிருப்போமா? எங்கள் சிறுவர்களின் பிற்கால நிலை இன்னும் எவ்வளவு பாழுடையுமென்று அநுமானிக்கக் கூடிய ஆற்றல் எங்களின் இல்லைத்தானோ? அல்லது மானமிழந்த வாழ்க்கைதான் எங்கள் பிற்சந்ததியாருக்கு நாங்கள் வாழ்ந்து காட்டிவிடப் போமா? தனது மயிர் ஒன்றே நீங்கினும் உயிர் வாழாக் கவரிமானைப்போல் மானத்துக்காக உயிர் துறக்கும் பண்டைப் பெரும் பண்புடையோம் நாம் என்பதை மறந்து வாழ்வோமா? "மயிர்நீப்பின் வாழாக் கவரியா வன்ன — ருயிர்நீப்பர் மானம் வரின்" என்னும் மறைமொழியை எம் முள்ளத்திருத்தி எங்கள் சமுகத்துக்குண்டாயிருக்கும் அவமானத்தை நீக்க நாம் ஒன்று கூடி முயலுதல் வேண்டும்.

### ஒற்றுமைக்கு அறை கூவல்!

இந்த முயற்சிக்கு அத்திவாரமாகுமாறு முதலாவதாக தமிழர் மகாநாட்டாருக்கும் தமிழரசுக்கட்சியாருக்குமிடையே சமாதான முண்டாக்க வேண்டும். ஒருகட்சியார் மீது மற்றக் கட்சியார் வசைமாரி பொழிந்து மகிழ வரும்படி அறைகூவி அழைக்கின்றனர். வசைமாரி பொழிய அவர்கள் விரும்பிய முனைப்பால் தமிழ்ச் சமுகத்துக்கு நாம் இசைமாரியாக்க முயலுதல் வேண்டும். இது செயற்கரியதென்று நினைக்கக்கூடாது நினைத்து மனந் தளரக்கூடாது. பெரியோராவர் அரியதையே செய்வர்.

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார்"

என்றபடி நாம் இதைச்செய்து அதன் மேல் ஏனைய கட்சிகளின் பிரிவுகளையும் நீக்கி எம

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## கற்பனை கற்பித்த கடவுள் .... .... ....

திருச்சிற்றம்பலம்

மற்றொரு துணையினி மறுமைக்குங் காணேன்
வருந்தலுற் றேன்மற வாவரம் பெற்றேன்
சுற்றிய சுற்றமுந் துணையென்று கருதேன்
துணையென்று நான்தொழப் பட்டவொண்சுடரை
முத்தியும் ஞானமும் வானவ ரறியா
முறைமுறை பலபல நெறிகளுங் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை யடியேன்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே.

திருச்சிற்றம்பலம்

ஆசிரியர் அலை

## வட பகுதித் துறைமுகங்கள் கைவிடப்பட்டனவா?

### பிரிவினையை உண்டு பண்ணிப் பேச்சைப் பின் போடவா?

### விலாங்கு மதி வினையாய் முடியும்!

வடபகுதியிலுள்ள காங்கேசன்துறை ஊர்காவற்றுறை, பருத்தித்துறை முதலிய துறைமுகங்களில் ஒன்றைத்தானும் கடற் பிரயாணத்திற்குத் தக்க விதமாக ஒழுங்கு செய்ய அரசாங்கத்துக்கு மனமில்லைப்போலும். இன்றேல் இதுவரையுங் காலங் கடத்தும் தந்திர யோசனைகளைச் சொல்லிக் கொண்டிருக்க மாட்டாது,

வடபகுதிப் பாராளுமன்றத் தவர்கள் ஒற்றுமைப்படவேண்டும். அப்பொழுதுதான் ஒரு துறைமுகத்தை ஒழுங்குசெய்யலாம் என்றால், துறைமுகம் இந்த யுகத்திலே கிடையாது என்பதுதான்.

எல்லாமனும் பிரதிநிதிகள் ஒற்றுமையாய்க் கே... அரசாங்கம் கொடுத்... ருல் இதுவரை பொதுசன வசதிகள் அமைக்கச் சர்வபிரதிநிதிச் சம்மதம் கிடைத்ததுண்டா?

கொழும்பிற் பல்கலைக் கழகம் வேண்டுமென்றனர் ஒரு சாரார். கண்டியில் என்றனர் இன்னொரு சாரார். அதிகப்...

தொடர்ச்சி 4-ம் பக்கம்

திருத்தொண்டர் திருநாள்

## திருவாரூர்ப் பிறந்தார்

பண்டு புரிந்த தவப்பயனால், திருவாரூரென்னுந் திருத்தலத்திற் சைவ சமயத்திற் பிறந்தோர் யாவரும சிவபெருமானது திருவருட்பேற்றினால், சிவகணநாதராயிருப்பர் அவர்களுக்குச் சாதி வேறுபாடுகளாவதும் உயர்வு தாழ்வெனும் பாகுபாடுமில்லை.

இஃதிவ்வாறிருப்ப, ஒருநாள் நமிநந்தியடிகள்நாயனார், மகோற்சவகாலத்தில், சுவாமியுடன் திருமணலிக்குச்சென்றார். அப்பொழுது திருவாரூருள்ளார் யாவரும் கலந்து சென்றனர். நாயனார் வீட்டுக்குத் திரும்பிய பொழுது, தாம் எல்லாச்சாதியாரோடும் கலந்து சென்றமையால் நீராடியே சிவார்ச்சனை செய்தல் வேண்டுமென்று வீட்டுக்குட்புகாமல், புறக்கடையிலே படுத்துறங்கும் பொழுது சிவபிரான் சொப்பனத்திலே தோன்றித் திருவாரூரார் யாவரும் சிவகணநாதர் என்பதனை நீ காண்பாய்! என்று கூறி மறைந்தருளினார். நாயனார் சிவார்ச்சனை முடித்து மறுநாள் திருவாரூருக்குச் சென்றபொழுது அங்குள்ளார் யாவரும் சிவகணநாதராய்த் திகழ்தலைக் கண்டு நிலத்தில் விழுந்து வணங்கிக் களிப்புற்றார்.

"தெய்வப் பெருமா டிருவாரூர்ப்
பிறந்து வாழ்வா ரெல்லாரு
மைமலைந் தனைய மணிகண்டர்
வடிவே யாகிப் பெருகொளியா
மொய்யமைந் தமர்ந்த மேனியராம்
பரிசு கண்டு முடிகுவித்த
கைகளைத் தஞ்சி யவனியின்மேல்
விழுந்து ணிந்துகளி சிறந்தார்!"

இவ்வாறு இவ்வுண்மையை உள்ளத்தில் வைத்துத் திருவாரூரார் திருவடிகளை வணங்குந் தன்மையர்க்கே உயரிய அருள் நெறி யணித்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கஅந்தணர்வானவர் ஆனினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம்அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே

# இந்துசாதனம்

யாழ். கரஹூ மாசி மீ
உஅ௳ செவ்வாய்க்கிழமை

## மதுபாவிகளை மனம்மாறச் செய்யுங் கடமை!

சமூக நல்வாழ்வைக் கருதும் பொதுநலத் தொண்டர்கள் ஒருங்குகூடி மதுவிலக்கு மகாசபை ஒன்றைச் சென்ற சனிக்கிழமை அன்று நிறுவி யிருக்கின்றார்கள். மகாநாடு கூடுவதும் சொற்பெருக்காற்றுவதும் நிர்ணயங்களை நிறைவேற்றுவதும் நாளாந்தர வாழ்க்கையின் ஒரு அம்சமாக இருக்கின்ற இக்காலத்தில் இம் மகாசபை என்ன பயன் கொணருமென்று பலர் வினவுவார்கள். ஆனால் மகாசபையின் நோக்கங்களை ஆராயுமிடத்து, தீர்மானங்கள்செய்வதிலோ அலங்காரப் பேச்சுக்களை நிகழ்த்துவதிலோ கவனம் செலுத்தும் விருப்புடையவர்களாக இத் தொண்டர்கள் காணப்பெறாமை பெருமகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

வேலைக்காக வேலைசெய்யும் பெருங் குறிக்கோளையுடையவர்கள், பணியாற்றியமைவார்களே யன்றிப் பயன் கருதவும்மாட்டார் எதிர்பார்க்கவும் எண்ணார். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற மகாவாக்கியத்திற்றின் நிற்கும சொல் இப்பேருண்மையை நன்கு விளக்குகின்றது. ஒழுக்க நெறியில் வாழ வேண்டுமென்றும் அவ்வாறு வையகமும் வாழ வேண்டுமென்றும் எவனொருவன் எண்ணுகின்றானோ அவனே சிவ தொண்டனும் சீவ தொண்டனும் ஆவான்! அத்தகைய பல தொண்டர் அமைந்த ஒரு மகாசபை நற்பணி ஆற்றும் என்பது சொல்லாது போதரும்.

மகாத்மா காந்தி அடிகள் இந்திய மக்களைத் தீயசெயல்களினின்றும் காப்பாற்றி நல்லொழுக்க வழியில் அமைக்கக் கையாண்ட சத்தியமார்க்கத்தின் சத்தியும் தத்துவமும் அகில உலகையும் அதிசயிக்கச் செய்ததெவருமறிந்ததே. அரசாங்கத்தின் உதவியை அவர் நாடினரல்லர். சட்டங்களை ஆக்குங்கள் என்று கேட்டவருமல்லர். மக்கள் மனத்தை மாற்றியமைக்க மாபெரும் இயக்கமொன்றை ஆரம்பித்து மனேசத்தியின் உத்தம தத்துவங்கொண்டு தொண்டாற்றி வந்தார். மக்கள் மனம் மாறியே விட்டது. அம்மகான் தான் போதித்த வெல்லாவற்றையும் சாதனை மூலங்காட்டி அதன் உண்மையை உள்ளங்கை நெல்லிக் கனிபோலத் தெள்ளிதாய் விளங்க வைத்தார். மகாசனங்களும் உண்மைத் தொண்டனின் உத்தம செய்கையை உற்றுணர்ந்து பின்பற்றினர்.

பிரதமர் நேரு வைத்திய நிபுணர்களுக்கு வேண்டுகோள் விடுக்கும்பொழுது மனத்தை மாற்றியமைக்க வைத்திய சாத்திர வித்துவத்தை உபயோகிக்கக் கூடாதா என்று கேட்டிருக்கிறார். என்னே? மக்கள் மனம் கீழ்நிலையடைந்தமை பற்றியே.

கள்ளுண்ணுமை புலாலுண்ணுமை ஆகிய உணவுடன் பொருந்திய ஆகாச் செயல்களை மனித வர்க்கம் தவிர்த்துப் புனிதர்களாவதற்குச் சமயநெறி ஒழுக்கங்களை இடித்து இடித்து அல்லும் பகலும் மகாசனங்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும். இவ்வுணவுகளுக்குப் பதிலாக வேறு பொருந்தும் உணவுகளை உபயோகிக்கக் கூடிய வசதிகளை உண்டுபண்ணுதல் வேண்டும்.

ஒழுக்க முறையில் இந்த இயக்கத்தை ஆராய்வதோடு பொருளாதாரத் துறையில் இதனை நோக்குவோமாகில் கள்ளுணவை உண்டுபண்ணுகிறவர்கள் தங்கள் சீவியத்துக்குரியதாகும் ஒன்றை மற்றையோர் ஒழித்துவிடுதல் பாதகச் செயலாகும் என்று கருதுவார்கள் என்றால் கள்ளுண்ணுதார் எவருமில்லையேல் கள்ளுண்டு பண்ணுந் தொழில் தானகவே நின்றுவிடவேண்டியதென்றும், அன்றியும் இக்கள்ளைத்தரும் அதே மரம் அதே பானத்துக்குச் சுண்ணம்பு சேர்த்து அதன் பொல்லா மதத் தன்மையையகற்றி எல்லாரும் நல்லாக உபயோகிக்கக்கூடிய ஓர் தாக சாந்தி தரும் பானமாகச் செய்தால் அதே வித உழைப்பைக் கொடுக்குமென்றும், பானத் தோடமையாது பாகு கற்கண்டு சருக்கரை போன்ற மதுரப் பொருட்களை உண்டுபண்ண உதவக்கூடுமென்றும் அவர்களுக்கு உள்ளதைஒருவாறு எடுத்துரைத்தால் அவர்கள் ஒருபொழுதும் கவலைப்பட மாட்டார்கள். ஒரே இடத்தில் ஒரே விதத்தில் இயற்றும் ஒரே தொழில் இரண்டு பேற்றை யளிக்குமென்றால் அவற்றிற்கு ஒரு அளவானகூலி கொடுபடுமாயின் கள் இறக்கினுலென்ன பதநீர் இறக்கினுலென்ன. முன்னையது உடம்புக்கும் உயிரோம்பலுக்கும் ஆகாததாகும், பின்னையது ஊராரின் பொருளாதார நிலைக்குரிய பலவேறு உபயோகப் பொருளாயும் உதவக் கூடியது எனவே இம் மகாசபை காந்தியடிகளின் சத்திய இயக்க முன்மாதிரியைப் பின்பற்றி நல்லெண்ணத்தை மக்களிடையே உண்டு பண்ணி இன் சொலால் இன்செயலால் நற்றொண்டாற்றுவார்கள் என இறைவனை இறைஞ்சுகின்றோம்.

# வாழ்க்கை அறம் வகுத்த வள்ளுவ வள்ளல்

## தமிழ் இலக்கிய அழகந் தந்த தெய்வப் புலவர்

தமிழ் நாடு செய்த தவப்பயனே திருவுருவெடுத்ததென இற்றைக்கு ஏறக்குறைய ஈராயிரமாண்டுகளுக்கு முன்பு திருமயிலையிலே ஆதிபகவனுக்கு அருந்தவப் புதல்தனுயுதித்தார் திருவள்ளுவநாயனார். இவர் வாசுகியம்மையாரை மணஞ்செய்து — "இயல்பினு னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான் முயல்வாருளெல்லாந் தலை" — என்றபடி அருள் வழி நின்று புலன்களை வென்று இறைவன் திருவடிகளை யடைய முயல்வாருளெல்லாம் தாமே தலைவராய் இல்வாழ்க்கை வாழ்ந்து இறை, உயிர், மலம் என்னும் முப்பொருளுண்மை யுணர்ந்து இவற்றின் சீரிய பண்புகளைத் தமிழ மக்களுக்கிடல்பாயமையும் வாழ்க்கைப் பண்பாடாய், அறம் பொருள் இன்பம் என்னும் முப்பாலில் வீடுநோக்குநிறபத் திருக்குறள் என்னும் திருத்திகழ்நூலிற்றந்த செம்மல்! திருவள்ளுவநாயனார்.

இத்தகைய பெருமை வாய்ந்த நூலைத் தந்தருளிய பின், தமது ஒப்பிலா வாழ்க்கைத் துணைவராகிய அம்மையார் தமக்கு முன்னரே இவ்வுலக வாழ்வை ஒருவ, தாமே தனித்தும் பல அறன்களைப் புரிந்து ஒளிபெறவாழ்ந்து இறைவன் திருவடிகளை யெய்தினரென்ப.

இவரது பெருமைப்பெருக்கைத் தெரிப்பனவாய முதற பாவலர், தெய்வப்புலவர், செந்நாப்போதார், பெருநாவலர் முதலிய திருநாமங்களும் இவரது நூலுக்கு, அந்நூல்தரும் ஒளிநெறியின் உயர்வை ஒவ்வொராற்றின் சிறப்புக்கிளைந்த வாதுரைப்பனவாய், முப்பானூல், தெய்வநூல், பொய்யாமொழி, தமிழ்மறை முதலிய திருப்பெயர்களுமமைந்தன.

### திருக்குறட் பெருமை

திருக்குறட்பெருமை செப்புதற்கரியது. இது செந்தமிழ் மொழியின் சிறந்த சொற்களால் ஆக்கப்பெற்று ஓதுதற்கெளியதாய் உயிர்க்குறுதிபயப்பதாய் ஒளிர்வது. இதன் பெருமை இஃதென்பது.

"தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழு முனிமொழியுங்— கோவை
திருவாசகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவாசகமென் றுணர்"

என, கல்வியிற் கரைகண்ட ஔவைப் பிராட்டியார் உரைத்தருளியவாற்றால், ஒருவாறு உய்த்துணரத்தகும்.

இது, அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவுகளையுடையதாய, முறையே மூன்னூற்றெண்பது, எழுநூறு, இருநூற்றைம்பது குறட் பாக்களால் இலக்கப்பெற்று, முழுதும் ஆயிரத்து முன்னூற்று முப்பது பாக்களையுடையது.

### திருக்குறள் தரும் வாழ்க்கைப் பண்பாடு

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

என்றதனால், நால்வகைத் தோற்றம் எழுவகைப் பிறப்பு எண்பத்து நான்கு நூறாயிர யோனிபேதங்களுடன், ஓரறிவு இரண்டு மூன்று நாலு ஐந்து ஆறு என்னும் எண்ணிக்கையில் அறிவுப் பேதங்களை யுடையனவாகிய உயிர்த்தொகுதிகளுள்ளே, பெறுதற்கரிய ஆறறிவுள்ள மானிடப் பிறவியைப் பெற்றவர்களுள்ளே, தோன்றி நின்று அழியுந் தன்மையதாகிய மானிட யாக்கையின் தன்மையை உற்று நோக்கி மனம் ஒருவழிப்பட்டு ஆராய்வாருக்குத் தெய்வம் ஒன்றுண்டெனும் சித்தமுண்டாகி, அத்தெய்வம், அக்கரங்களுக்கெல்லாம் அகரம் ஆதியாய் நிற்றல்போல், அவன், அவள், அது என்னும் முக்கூற்றுப் பிரபஞ்சத்துக்கும் ஆதியாயிருக்கின்றதென்னும் அறிவுப்பண்பாட்டை யுடையராயிருந்தனர், நிக்தமிழ்த் திருக்குறளையுடைய தென்னாட்டு மக்கள் என்பது பெறப்படுகின்றது.

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது.

என்பதனால்,

இத்தகைய முதற்பொருளானது அக்கரங்களெல்லாவற்றுக்கும் அகரம் முதலாயிருப்பதுபோல் உயிர்கள் முதலிய எல்லாவற்றுக்கும் ஒப்புயர்வில்லாத் தனிமுதற்பொருளாயிருக்கின்றது; ஆகையினாலே அத்தனிமுதற் பெருளின் திருவடிகளை யடைந்தவர்க்கேயன்றி ஏனையோருக்கு மனக்கவலையானது வேறெவ்வாற்றானும் மாற்ற முடியாது என்பது அறியக்கிடக்கின்றது. ஆகவே, உயிரும், உயிருக்குள்ள கவலையும் வெளிவிடை மலையாதலின், கவலைக்கேதுவாகிய ஒரு பொருளுண்டென்பது உய்த்துணரக்கிடக்கின்றது. அஃதே மலம் எனப்படும். எனவே முப்பொருளுண்மை மொழிந்ததுமாயிற்று.

உயிரானது இறைவன் திருவடிகளையடைதற்கு உலகப்பற்றெல்லா மொழித்தலாகிய பூரண துறவு வேண்டும். பூரண துறவுக்கு அறம் ஏதுவாயிருக்கின்றது.

"அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு"

என்றபடி தன்ப நீக்கத்துக்கும் இன்பஆக்கத்துக்கும் அறனே அருந்துணையாயமைவது. அறத்துக்கு ஒழுக்கம் அத்திவாரமாயுள்ளது. அன்பு, அருள், சத்தியம், செய்ந்நன்றியறிதல், கடவுநிலைமை முதலியனவாகக் கூறப்பட்ட எல்லாம் ஒழுக்கத்துறைகளாய் அறநெறியின் அங்கங்களாயமைய அறநெறியாவது இல்லறம் துறவறம் என இருகூறுடையமைந்துளது. இல்லின்கட் செய்வதும் இல்லை நீத்துச் செய்வதுமாகிய வேறுபாடேயன்றி இவை யிரண்டும் இறைவன் திருவடிகளை யடைவிக்கும் அறங்களேயாம். இவற்றின் உறுப்புக்களை விளக்கும் குறட்பா ஒவ்வொன்றும்

"கடுகைத்துளைத்தேழ் கடலைப்
புகட்டிக்—குறுகத் தறித்தகுறள்"

என்ற விதந்து கூறப்படுநிலையுற்று நோக்குமிடத்து அவற்றை இச்சிற்றுரையில் விரித்து விளக்க முயலுவேமாயின் அதன் பயன் முடவன் கொம்புத்தேனைப் பெற முயன்றதன் பயனையொக்குமாதலின் அவ்வாறு முயலுதலொழித்தேம்.

ஈண்டுக் கூறியவாற்றால், கடவுள் ஆன்மா மலம் என்னும் முப்பொருளுண்மையும், ஆன்மா, துன்பம் நீங்கி இன்பம் பெறுதற்கு இறைவன் திருவடிகளை யடைதலேயன்றி வேறு வழியில்லை யென்பதும், இறைவன் திருவடிகளை யடைதற்கு அன்பு சத்தியம் முதலிய உறுப்புக்களை யுடைய அறநெறியொழுக்கம் இன்றியமையாதென்பதும் ஒருவாறு விளக்கப்பெற்றன. வேத சிவாகமங்கள், தேவார திருவாசகங்கள், திருக்கோவையார் திருமந்திரம் முதலிய எல்லாம் தருவன இவையேயாம் என்பது முன்னர்க் கூறிப் போந்தவற்றாற் பெறப்படுதலின் தமிழ் மக்களின் வாழ்க்கைப் பண்பாடு இவற்றை இவ்வாறு கண்டொழுகுதலேயாமென்பது நன்கு பெறப்படு

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

# வாழ்க்கை வானில்

வளர்மதி

### சபைப் பேச்சில் 'இடக்கரடக்கல்'

பாராளுமன்றம் என்றால் நாட்டின் பரிபாலனத்தை நடத்தும் பிரதிநிதிகள் சபை என்பது விளக்கம். ஆகவே உயர்தர சபை என்பது போதரும். அச்சபைகளிற் பேச்சு தகைமைக்கேற்றவாறு உத்தமமாயிருத்தல் வேண்டியது முறை.

பாராளுமன்றத்திற் பல பேச்சுவல்லுநர்கள் இருக்கிறார்கள். அழகாகப் பேசக்கூடியவர்கள். சொற்சுவை பயப்[illegible] வசதாடுவார்கள். பேச்சை எச்சாக மாற்றி விடுபவர்களுமில்லாமலில்லை.

கருவாடு, பருப்பு, முதலிய சேவிப்பதங்களை உபயோகித்து விவாதத்தைச் சிறப்பிக்கின்றோமென்று கருதுபவர்களுமுண்டு.

O O O

பாராளுமன்றம் அப்படி என்றால் நகரசபை ஒரு படி கூட. சொல்யுத்தம் நடந்து கொண்டிருக்கும். கோபாக்கினி கொழுந்துவிட்டெரிய மல்யுத்தம் ஆரம்பமாகிவிடும். சில காட்களுக்கு முன் கொழும்பு நகரசபை நிகழ்ச்சிகள் எவரையும் பிரமிக்கச்செய்யும் வண்ணமாகவே நடைபெறுகின்றன. சென்ற வாரம் சொற்போர் மற்போராக மாறும்போல விருந்தது.

O O O

இங்ஙனமே பட்டின சங்கங்கள் நகர சபைகள், வேறு சமூகக்கழகங்கள் சபைப்பேச்சை அமங்கல முறையிற் கையாளுவது கலிகாலத்தைக் காட்டுகின்றது.

O O O

முற்காலத்திலே புலவர்கள் நிலைமையைக் கருதும் அல்லது [illegible] அழிவை யுணர்த்துஞ் சொற்களை உபயோகிக்கமாட்டார்கள். அறுவர் என்ற சொல் ஆறுபேர் என்பதைக் குறிக்கினும், அறுத்தல் என்னும் அழிவை உணர்த்தும் ஆகையால் உபயோகிக்கப்படுதல் அரிது.

ஆனல் உயர்தர சபைகளில் ஆங்கிலத்தில் ஏச்சுக்கான பேச்சுச் சொற்களை மனம்போனவாறு கையாளுகின்றனர். பேச்சலங்காரப் பிரபுவான சேர் இராமனுதன் அவர்கள் இத்தகைய பேச்சை 'சாக்கடை எழுந்த கழிவுப் பேச்சென' ஆங்கிலத்தில் அழகாக எடுத்து இகழ்ந்ததுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம விருத்திக்குக் கால் நடைகளைக் காப்பாற்ற வேண்டும்!

## பொதுக்கூட்டத்திற் பலதீர்மானங்கள்

9-3-52 காலை 10 மணியளவில் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாசாலை மண்டபத்தில் அகில இலங்கைக் காந்திய சேவா சங்க ஆதரவில் கால்நடைகள்பாதுகாப்பு மகாநாடு நடைபெற்றது. குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்து பிரமுகர்களும் அன்பர்களும் சமுகமளித்தனர். பிறக்டர் அ. அருளம்பலம் அவர்கள் (வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபைக் காரியதரிசி) தலைமை வகித்தார்கள். பிரார்த்தனைக்குப்பின் கௌரவ தபால் தந்திப் பகுதி மந்திரி திரு C. சிற்றம்பலம் M. P அவர்களும் மன்னார்ப்பகுதி உதவி மாகாணாதிபதி அவர்களும் வேறு பல பிரமுகர்களும் அனுப்பிய பாராட்டுச் செய்திகள் மகாநாட்டில் வாசிக்கப்பட்டன. மகாநாட்டில் வடபகுதிக் கமத்தொழிற்பகுதி அதிகாரி உட்பட பல பிரமுகர்கள் கால்நடைகள் பாதுகாப்பைக் குறித்துப் பேசினார்கள். அதன்பின் ஏகமனதாகப் பின்வரும் தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

1. வடமாகாணப் பகுதிகளில் இருந்து பசு, எருது, எருமை, ஆடு முதலிய கால்நடைகளை இறைச்சியின்பொருட்டும் ஏனைய தேவைகளின் பொருட்டும் வெளியிடங்களுக்குப் புகைவண்டி மூலமும் ஏனைய வாகனங்கள்மூலமும் வெளியேற்றுவதை யிட்டு இம்மகாநாடு வருந்துகின்றது. இவ்விதம் கால்நடைகளை வெளியேற்றுவதால் கமக்காரர்கள் கால்நடைகளாலான உதவிகளினாலும் அவற்றினாலான பசளைகளினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள் என்றும், பாலுணவு குறைந்து மக்களின் சுகாதார நிலை மிகவும் பாதிக்கப்பட்டு வருகிறதென்றும், கால்நடைகளை வெளியேற்றும் வியாபாரத்தினால் ஒரு கிராமத்தில் இருந்து கால்நடைகளை இராக் காலங்களில் திருடி மற்றோர் கிராமத்திற்கு அப்புறப்படுத்தும் முயற்சியை ஒரு தொழிலாக சில தாசர்கள் கைக்கொள்ளுகின்றார்கள் என்றும் இம்மகாநாடு அரசாங்கத்துக்கு எடுத்துக் காட்டுகின்றது. ஆகையால் இவ்விதம் கால்நடைகளை எக்காரணம்பற்றியும் இறுதியாக வெளியேற்றுவதை உடனே முற்றாக அரசாங்கம் தடுக்கவேண்டும் என்றும், பொதுவாகக் கால்நடைகள் குறைந்து வருவதை உத்தேசித்து இறைச்சியின் பொருட்டு கொலை செய்யப்படுவதைத் தடுக்க (சட்டப்படுத்த) வேண்டும் என்றும், அகில இலங்கைக் காந்தியசேவாசங்க ஆதரவில் கூட்டப்பட்ட முதலாவது கால்நடைகள் பாதுகாப்பு மகாநாடு வற்புறுத்துகின்றது.

பிரேரித்தவர்: திரு. R. N. சிவப்பிரகாசம்; அனுவதித்தவர்: திரு. செ. துரைசிங்கம்.

2. இலங்கையில் உள்ள அரிசி மில்களிற் கிடைக்கும் தவிட்டை மிகக் குறைந்த விலையிற் கமக்காரர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்காகக் கூட்டுறவுப் பண்டகசாலை கள்மூலம் கண்காணிப்புடன் விநியோகிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

பிரேரித்தவர்: த. நல்லதம்பி, அனுவதித்தவர்: அ. சடாட்சரம்.

3. செல் விளைவுப் பிரதேசங்களில் இருந்து கால்நடைகளின் உணவுக்காக வைக்கோல் முதலியவற்றைப் புகைவண்டி மூலம் கமக்காரர் வருவிக்க அதிக செலவுகள் ஏற்படுகின்றன. இவற்றுள் வைக்கோல் விலை யாழ்ப்பாணப் பகுதியில் மிக அதிகமாக இருக்கின்றது. ஆகையால் செல் விளைவுப் பிரதேசங்களில் இருந்து வைக்கோலை வருவித்து குறைந்த விலையில் கமக்காரர்களுக்கு நேரடியாகவினியோகிக்கத்தக்க ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டும்.

பிரேரித்தவர்: செ. துரைசிங்கம், அனுவதித்தவர்: செ. சின்னத்தம்பி.

4. யாழ்ப்பாணத்தில் உள்ள கால் நடைகளுக்குப் போதியளவு வைக்கோல் இன்மையால் மட்டக்களப்பு மாகோ, அனுராதபுரம், வவுனியா, கிளிநொச்சி முதலிய இடங்களில் இருந்து வைக்கோலை வருவித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. வைக்கோலை இவ்வாறு வருவித்துக்கொள்வதில் ஏற்படுகின்ற சிரமங்களைத்குறைத்து புகைவண்டி முதலிய வாகன சாதனங்களில் எளிதாக இப்பொருள்களைக் கொண்டு வருவதற்குதவியாக (Baling) இயந்திரங்களை மேலே குறிப்பிட்ட புகைவிரத ஸ்தானங்களில் அரசாங்கம் அமைத்துத்தரல்வேண்டும்.

பிரேரித்தவர்: செ. சின்னத்தம்பி அனுவதித்தவர் மு. பாலசிங்கம்.

5. வட மாகாணத்தில் உள்ள கமக்காரர்களது உபயோகத்திற்கு கால்நடைகள் மிகவும் போதாமையால் கால்நடைகள் விலை அதிகரித்துள்ளது. ஆகையால் வெளியிடங்களிலிருந்தோ, வெளி நாடுகளிலிருந்தோ உபயோகத்திற்குரிய கால்நடைகளைக் குறைந்தவிலைக்கு இறக்குமதி செய்துதரவேண்டும்.

பிரேரித்தவர் அ. சரவணமுத்து அனுவதித்தவர் சி. நல்லையா.

6. கால்நடைகளின் விருத்திக்காகவும் நல்ல இனத்தைப் பரப்புவதற்காகவும், ஒவ்வொரு கிராமச்சங்கப் பகுதிகளிலும் காளைகள் ஸ்தானத்தை அரசாங்கம் தனது மேற்பார்வையில் அமைக்கவேண்டும்.

பிரேரித்தவர்: கா. சிவபாதசுந்தரம், அனுவதித்தவர்: இ. கா. அப்புத்துரை.

7. வடமாகாணத்தில் கால்நடைகள் விருத்தியடைவதற்காக வருடந்தோறும் ஏற்ற இடங்களில் கால்நடைகளின் (மாடு) சந்தைகள் ஏற்படுத்துவதற்கான வழிவகைகளைக் கையாளவேண்டும்.

பிரேரித்தவர்: மு. பாலசிங்கம், அனுவதித்தவர்: அ. ஆறுமுகம்

(8) வட மாகாணத்தில் கால்நடைகள் பாதுகாப்புச் சம்பந்தமாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சம்பந்தமாகவும் கௌரவ கமத்தொழில் மந்திரியார் அவர்களையும் வடமாகாண அதிபதி அவர்களையும், ஏனைய அரசாங்க அதிகாரிகளையும் சந்தித்துப் பேசுவதற்காக திருவாளர்கள் அ. அருளம்பலம், R N. சிவப்பிரகாசம், K. சண்முகம், செ. துரைசிங்கம், க. நவரத்தினம் சி. க. வேலாயுதபிள்ளை ஆகியோர் கொண்ட தூதுகோஷ்டியை அகில இலங்கைக் காந்திய சேவாசங்க ஆதரவிற் கூட்டப்பட்ட முதலாவது கால்நடைகள் பாதுகாப்பு மகாநாடு நியமித்துள்ளது.

பிரேரித்தவர்: செ. சின்னத்தம்பி, அனுவதித்தவர்: ஆ மார்க்கண்டன்.

# இந்து ஆலய பரிபாலன சட்ட திட்டம்

## பாராளுமன்ற மேற்சபைக் குழு செய்த திருத்தங்கள்

பாராளுமன்ற மேற் சபையார் திருத்தியமைத்த இந்து ஆலயச்சட்டத்தின் விசேஷ உறுப்புக்கள் கீழே காணக்கிடக்கின்றன.

(1) சட்டத்தின்பெயர் "இந்து ஆலயம்" என்னும் சொற்றொடரை முன்னிட்டுத் தொடங்குதலால், ஆலயத்துக்கு இழிவு வந்துவிட்டதென்று அஞ்சிய ஆத்துக்களுடைய மனம் அவ்வாறு எவ்வித இழிவும் உண்டாகவில்லையென்று சமாதானம் பெறும் பொருட்டு அதன் பெயரே இந்து அறநிலையச் சொத்துச் சட்டமென்று மாற்றப்பெற்றிருக்கின்றது.

(2) இத்துவாக்காளராற் தெரியப்பெற்ற ஒரு சபை நெறிமுறையுமாகூடி இந்து அற நிலையச் சொத்துப் பரிபாலனமுஞ்செய்யும், சட்ட சம்பந்தமான விஷயங்களைக் காரியாதிகாரி (Commissioner) செய்வார். அவருடைய தீர்மானத்திற் திருப்திப்படாவிட்டாற் பெரிய நீதிமன்றத் தீர்ப்பு வேண்டி மனுச் செய்யலாம்.

3. தர்ம கர்த்தாக்களை நியமிப்பது முதலியவற்றைச் செய்வதற்கு இப்பொழுது அற நிலையச் சட்டத்தின்படி கையாளப்படும் முறையே கையாளப்படும். சட்ட முறைப்படி யமைத்த ஒழுங்குகள் இல்லாத நிலையங்களுக்கு வேண்டிய ஒழுங்குகளை சபையாருடைய ஆலோசனையுடன் காரியாதிகாரி செய்வார். இவை திருப்தியாயில்லாவிட்டாற் பெரிய நீதிமன்றத்துக்கு மனுச் செய்யலாம்.

(4) இந்து அறநிலைய அறநிலையச் சொத்துப் பரிபாலனம் இந்து வாக்காளர் தெரிவு செய்தமைத்த இந்து அறநிலைய அறநிலையச் சொத்துப் பரிபாலனசபையின் பொறுப்பிலிருப்பதால், காரியாதிகாரி எச்சமயத்தவராயுமிருக்கலாம்.

(5) இலங்கை ஒன்பது வாக்காளர் பிரிவுகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு பிரதிநிதியைத் தெரிவு செய்யும். இந்த ஒன்பதின்மரும் பத்தாம் அங்கத்தவராக ஒருகுருக்களைத் தெரிவு செய்வர்.

(6) வாக்காளராக விண்ணப்பஞ் செய்வதற்குமுன் மூன்று வருடங்களில் ஐம்பது ரூபாவுக்குக் குறையாத பொருளுபகரித்தவர்களும் பத்து ரூபாவுக்குக் குறையாத உபய வழிபாடு செய்தவர்களுமே வாக்காளராவர்.

(7) வாக்காளர் தெரிவு செய்சபை உருவாகும்வரையும் பிரதிநிதித்துவம் வாய்ந்த இந்தச் சபைகளின் ஆலோசனையைப் பெற்று ஒரு இடைக்காலச் சபையை மந்திரி யமைப்பார்.

(8) காரியாதிகாரியின் அதிகாரத்தைக் கொண்டு அற நிலையங்களைப் பார்வையிடுபவர் இந்துவாயிருத்தல்வேண்டும். அவர் சமயாசார முறைப்படியே உட்பிரவேசிக்கலாம்.

(9) சமயக்கல்வி நிறக்குத் தங்கள் நிலையங்களின் பண நிலைக்குத் தக்கவாறு தர்ம கர்த்தாக்கள் தாம் விரும்பியபடி பணமுதவலாம்.

(10) வாக்காளர் எல்லைப் பிரிவுகள்.

1. யாழ்ப்பாணம், வலி கிழக்கு, வடமராட்சி.
2. வலி வடக்கு, வலி மேற்கு, நெடுந்தீவும், தீவுப்பகுதிகளும.
3. தென்மராட்சி, பச்சிலைப் பளி - கரைச்சி, பூநகரி, மன்னார், வவுனியாப்பிரிவுகள்.
4. திருக்கோணமலைப்பிரிவு.
5. மட்டக்களப்புப் பிரிவு
6. மத்தியமாகாணம்.
7. வடமத்திய வடமேற்கு மாகாணங்கள்.
8. மேல்மாகாணம் தென்மாகாணங்கள்.
9. சப்பிரகமுவ, ஊவாமாகாணங்கள்.

## திருவள்ளுவ நாயனுர் குருபூசை

நிகழும் கர வருடம் மாசி மாதம் உகூஉ (12-3-5 ) புதன்கிழமை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை யாதரவில் திருவள்ளுவ நாயனுர் குருபூசை மேற்படி சபையினது சைவாச்சிரம நாவலர் மண்டபத்தில் நடத்தப்பெறும்.

நிகழ்ச்சிகள்

மாலை 6-30—7 கடவுளாராதனை.
7-00—9 திரு. இ. சிவகுருநாதர் அவர்கள் தலைமையில 'திருவள்ளுவ நாயனுர்' என்னும் பொருள்பற்றிப் பிரசங்கங்கள்.

1 திரு. மா. மகாதேவன் B. A. (Hons)
2 பிரம்மஸ்ரீ வியாகரண மகோபாத்தியாய வை. இராமசாமி சர்மா.

தமிழபிமானிகளும் சைவாபிமானிகளும் சமுகமளித்து முப்பாலின் நயத்தைப் பருகுவார்களாக.

மு. மயில்வாகனம்
சமயப்பிரசார அமைச்சர்
சைவ பரிபாலனசபை
யாழ்ப்பாணம்
10—3—52.
M 240 11

## தமிழ் அகராதிகள்

நல்லூர் கு. கதிரவேற்பிள்ளை அவர்கள அல்லது மேலைப்புலோலி நா. கதிரவேற்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட தமிழ் அகராதிகள் வைத்திருப்பவர்கள் யாரேனும் விற்க விரும்பினுல் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்திற்குத் தெரிவிக்கவும்.

காரியதரிசி
புலோலிக் கலாநிலையம்
பருத்தித்துறை
4—3—52
M. 241. 11.

## வாழ்க்கை அறம் வகுத்த வள்ளுவ வள்ளல்

2-ம் பக்கத்தொடர்ச்சி

கின்றது. இந்த அரிய உண்மைகளை உள்ளத்திருத்தி ஒழுகுதலைக் கொஞ்சமேனும் பேறில்லாதவராய் இத்தகைய அறிவுக்குறியென்பது வாழ்க்கையிற் சிறிதுமில்லா ஆங்கிலேயர் அமெரிக்கர் ஆகியோரைப் பின்பற்றுவதோடமையாது அருவருக்கத்தக்க இருள் செறிந்த ருஷிய முறைகளையும் இக்காலச் சகோதரர் ஒளிபெறு இறுமாப்புடன் பின்பற்றுதல் விளக்கில் விழுகின்ற விட்டிற் பூச்சியின் தன்மையை யொக்குமாகலின் அன்னவரையும் இவ்வொளிநெறிக்கட் சித்தத்தைத் திருப்புமாறு அன்பாய்க் கோருகின்றோம்.

## இந்திய பிரதமருக்கு சீன அழைப்பு

சீனவுக்கு வரும்படி சீனமக்கள் தம்மை அழைக்கின்றனரென்றும் தமக்கு மிகுந்த விருப்பமிருக்க போதிலும் தாம் இத்தருணம் சீனவுக்குப் போக முடியவில்லையெனறும் இந்திய பிரதமர் பண்டிதநேரு அவர்கள கூறுகின்றார்.

## உண்ணு விரதம்!

இந்திய ஆபிரிக்க மக்களை யொதுக்கும் தென் ஆபிரிக்க அரசாங்கச் சட்டங்களை எதிர்க்கும் முறையில் 21 நாள் உண்ணுவிரதம் தொடங்குகின்றார் திரு மணிலாலகாந்தி அவர்கள்.

## ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் யாழ்ப்பாண சைவப்பிரகாச வித்தியாசாலை

இப்பொழுதிருக்கும் வித்தியாசாலை அதிகாரி, இதற்குமுன் வித்தியாசாலை அதிபதயாக விருந்த ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை அவர்கள் 1919 ஆண்டு பங்குனி மாதம 27ம் திகதி நொத்தாரிசு க. சு. வீரவாகு முன்னிலையில் 10261 இலக்கத்தில் எழுதிய தத்துவ நியமன உறுதியில் சொலலிய விதானங்களில் சிலவற்றிற் சொல்லியபடி கிரமமாக நடாதாவராதபடியால் இதன் கீழ் கையொப்பமிடும் சைவக் குருக்கள்மாராகிய நாங்கள் மேற்படி சாதனத்தில் சடு பிரிவினுல் எமக்களுக்குத் தந்துள்ள அதிகாரதமைக் கொண்டு தற்போது நாவலர் அவர்களால், இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் ஸ்தாபிக்கப்பெற்ற சைவப்பிரகாச வித்தியாசாலையினதும் அதைச் சேர்ந்த பிற தருமங்களினதும் நியாயசதாரி, (ரிஸீவரியும்)மனேஜரும் அதிபதியுமாயவிருக்கும் ஸ்ரீமுத்தையாபிள்ளை சோமசுந்தரமவர்களின் தர்மபத்தினி செல்வம் அவர்களை, அவமேற்சொல்லிய தர்மபரிபாலனதைதக் கையேற்றநான்முதல் நகூடுக ஆடமுடிய மேற்படி தர்மஸ்தாபனங்களின் வருஷாந்த வரவு, செலவு, இருப்புக் கணக்குகளைச் சைவதன்மக்கள் எல்லோரும் அறியக்கூடிய விதமாகப் பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

1. செகலையர் சிவஸ்வாமிக்குருக்கள், திருக்கேதீஸ்வர ஆலய அர்ச்சகர். (மேற்படி, சை. பி. வி.) பழையமாணவர், அராலி.

2. சுப்பிரமணியஐயர். பரமேஸ்வரக்குருக்கள், வித்தியாசாலை. பழையமாணவரும் சித்திவிநாயகர்கோவில், அர்ச்சகரும் கந்தர்மடம்.

3. சிதாபதிஐயர் வைத்தீஸ்வரசாமிகுருக்கள் மேற்படிவித்தியாசாலை பழைய மாணவர் அங்குசபாச விநாயகர்கோவில அர்ச்சகர் வண்கிழக்கு.

4. செல்லத்துரைக் குருக்கள் பாலசுப்பிரமணியக் குருக்கள் மேற்படி வித்தியாசாலைப பழைய மாணவர் மாசவரோதயர் பிள்ளையார்கோவில் அர்ச்சகர் நீராவியடி,

5 சின்னையர் சோமசுந்தரஐயர், மேற்படிவித்தியாசாலைப் பழையமாணவர், உபகாரசம்பளம்பெறும அரசினர் பாடசாலைத் தலைமை ஆசிரியர், நீராவியடி வண் - கிழக்கு.

6. மகேஸ்வரக் குருக்கள் செகந்நாதக் குருக்கள் மேற்படி வித்தியாசாலை பழையமாணவர் சாந்தையார்மட பிள்ளையார்கோவில் பூசகர், வணகிழக்கு.

7. நி இரத்தினசபாபதிக்குருக்கள், காட்டுத் துறைப் பிள்ளையார்கோவில் அர்ச்சகர்.

8. நா. சிவசாமிக்குருக்கள் தட்டாதெரு

9. ப. சிவஞானசுந்தரகுருக்கள் அர்ச்சகர் அரசடிவினாயகர் ஆலயம் மணிக்கூட்டுவீதி.

10. ச. இராமசாமிக்குருக்கள் ஸ்ரீவெங்கிடேச வரதராஜப் பெருமான்கோவில் அர்ச்சகர்.

11. கார்த்திகேசக்குருக்கள் மகேஸ்வரக்குருக்கள் இந்துக்கல்லூரி வீதிஞான வைரவசுவாமிகோவில் பூசகர் சிவலிங்கப்புளியடி யாழ்ப்பாணம.

12 பஞ்சாட்சரவரக்குருக்கள் சர்வேஸ்வரக்குருக்கள், சிவலிங்கப்புளியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுட் சமரசம் உண்டு பண்ண ஒரே ஒரு வழி

முதலாம்பக்கத் தொடர்ச்சி

சமூகத்தின் பெருமையை நிலை நாட்டவேண்டும். நாம் எடுத்த கருமத்தைத் தளர்வின்றிச் செய்வோமானால் அந்த நன்முயற்சியே நாம் எடுத்த கருமம் சித்தியெய்துதற்கு வேண்டிய வலியைத் தருமென்று "அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும் பெருமை முயற்சி தரும்" என்னுந் திருப்பாவால் எம் தெய்வப்புலவர் தரும் உறுதிமொழியை யுள்ளத்திருத்தி நாளை-நாளையெனக் காலந் தாழ்க்காமல் இன்றே அதுவும் இன்னே செய்ய முயல்வோமாக!

## யார் ஆரம்பிப்பது?

இப்போ "பூனைக்கு மணி கட்டுவது" யார்? அது எப்படி? என்ற கேள்விகள் எழுகின்றன. இது யாராயினும் ஒருவராற் செய்யத் தக்கதன்று. அகங்காரமுனைப்பின்றித் தூய நோக்கத்துடன் அறிஞர் பலர் சேர்ந்து முயலவேண்டும். இத் தொடர்பில் உதவக்கூடியனவாய் எம் உள்ளத்தில் எழுகின்ற ஒரு சில கருத்துக்களைக் கூறி அவற்றை நன்கு ஆராய்ந்து ஆவன செய்யுமாறு யாவரையும் அன்பாய் வேண்டுகின்றோம். இதை வாசிக்கும் ஒவ்வொருவரும் தமது கடனென நினைத்துப் பணியாற்ற வேண்டும். அவ்வளவில் நில்லாது தமது அன்புக்குரியராய் அணிமையிலுள்ளார் யாவரையும் இதிற் பங்குபற்றுமாறு அழைக்கும்படி யாவரையும் வேண்டுகின்றோம்.

## சமரசக் கழகம் அமைத்தல் வேண்டும்!

இதற்கென ஒரு சபை உடனே அமைக்கவேண்டும். அச்சபையின் தலைவர் இறுகிய கட்சித்தலைவராற் பத்திக்கப்படாத ஒருபெரியாராயிருக்க வேண்டும். அத்தன்மையராய ஒரு காரியதரிசி வேண்டும். நடுவு நிலைமையை அணிகலனுயுள்ளார் ஏனைய உறுப்பினரும் நிருவாகசபை அங்கத்தவருமாகவேண்டும். இத்தகைய ஒரு சபையை உருவாக்கும் பணியை அன்பாய் விரும்பி ஏற்கும் உத்தமராயுள்ளார் யாவரும் குறிக்கப்பெறும் ஒரு நாளில் யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்திலோ அன்றித் தகுந்த வேறோரிடத்திலோ சமுகமளிக்கவேண்டும். இவ்வாறு சமுகமளிக்குமுன்னரே அன்னவர் பெயர் விலாசம் ஆதியன ஒரு இடாப்பிற் பதியவேண்டும். நாமோ ஆரம்பசூரர். தொடங்கிய ஒன்றை விரைந்து கை விடும் வீரர்! ஆகையால், தொடங்கு முன்னரே இத்தூய பணியை மேற்கொள்ளும் ஆர்வமுள்ளோர் பெயர்கள் ஒரு இடாப்பிற் குறிக்கப்பெற்று அன்னவர்கள் ஒருங்குகூடி எங்கள் தொடக்கத்தையே நாம் தூயதாக்கிக்கொள்ளும் வழிவகைகளை முன்னரே அமைத்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு செய்வதற்கு இதற்குமுன்னர் எடுத்தாளாத ஒரு முறையை, உலகுக்கு விளம்பரப்படுத்தித் தொடங்குவதைத் தவிர்க்கும் ஒரு புதுமுறையை நாம் கூற விரும்புகின்றோம். இங்ஙனம் இவற்றைச் சும்மா கூறியமையாது இந்தச் சபை அமைப்புச் செயலாளராய்த் தற்காலிகமாக வழியஞ்செய்தலை நாம் ஏற்கின்றோம். இச் சபையின் அங்கத்தவராகித் தொண்டாற்ற ஒருப்படுவோர் தயைகூர்ந்து தங்கள் பெயர்கள் விலாசங்கள் ஆகியவற்றை எமக்கு எழுதி அறிவிக்குமாறு பணிவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். குறைந்தது நூறு பேராகுதல் ஒன்று சேர்தல் விரும்பத்தக்கது. நூறுபேர் சேருமளவுக்கும் பெயர்களைப் பகிரங்கப்படுத்தாது வைத்து நூறுபேர் சேர்ந்தவுடன் எல்லாப் பெயர்களையும் பகிரங்கப்படுத்தி ஓர் பகிரங்கக் கூட்டங் கூடிச் சபையை அமைத்து அதன்மேற் செய்யவேண்டியவற்றை ஆராய்வோம். நூறுபேர் சேரும்வரையும் அடியேம் புனைபெயருடன் மறைவாய் நிற்க விரும்புவேம். அவ்வளவுக்கும் யார் யாரென்று வினவுதலை யொழியுமாறு யாவரையும் வேண்டுகின்றோம். கீழே காணும் விலாசத்துக்கெழுதினுல் இப்போதைய தேவை பூர்த்தியாகும். "எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் — மெய்ப்பொருள் காண்பதறிவு" என்பதே எங்கள் மரபாகலின் ஒவ்வொருவரும் சொன்னவர் யாரென்று சிந்தியாது, சொன்ன பொருள் எத்தன்மையது என்பதைச் சிந்தித்து, தமது வாழ்க்கை நிலைமைகளின் பெருமை சிறுமைகளை நினையாது பங்குபற்றுமாறு வேண்டுகின்றோம். மனத்தூய்மை யுண்டாக வினைத்தூய்மை யுண்டாகும். வினைத்தூய்மை தூயவிளைவைத்தரும். சந்தேகமின்றி. "தெய்வத்தானாகா தெனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலிதரும்" என்னும் திருப்பா ஒருபோதும்பொய்யா மொழியாகலின் அறிவொழுக்கங்களிற் சிறந்த பெரியோர் அன்புள்ள சகோதர சகோதரிகள் யாவரையும் தம்மாலாவது புரியுமாறு அன்பாய்ப் பணிந்து வேண்டுகின்றோம்.

"ஒன்றுபட்டா லுண்டு
வாழ்வே — நம்மில்
ஒற்றுமை நீங்கிலனைவர்க்குந்
தாழ்வே!
நன்றிது தேர்ந்திடல்
வேண்டும் — இந்த
ஞானம்வந்தாற் பின்
நமக்கெது வேண்டும்?"

என்னும் பாரதியாரின் ஆப்தமொழிகள் எமக்கு ஒளிநெறி காட்டி உறுதுணை புரியுமாறு அவற்றை எம்முள்ளத்திருத்துவோமாக.

தயைகூர்ந்து இந்துசாதனப் பத்திராதிபருக்கெழுதுங்கள்.

## அரசியல் அலை

1-ம் பக்கத் தொடர்ச்சி

(போராட்டமெ)யில் இறவத் தீர்மானஞ் செய்தார்கள். ஒற்றுமைப்படுங்கள் என்று சொல்லி ஆங்கில அரசாங்கம் (அப்போதிருந்தது) பல்கலைக்கழகத்தை வழங்காது விட்டிருக்கலாமே!

பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலையுங் காட்டும் விலாங்குபோன்று அரசாங்கம் துறைமுகக் கட்சியினரைச் சமாளித்துவிட எண்ணுவது தவறு. இருசாராரும் அநாபத்தையுமிழுந்து விடாது பொதுசன நன்மைகருதி எது மிகவும் வேண்டப்படும் துறைமுகமோ அதைக் காலதாமதமின்றித் திறந்து வைக்காவிட்டால் அரசாங்கம் இருதிறத்தாரின் அநுதாபமுமில்லாது போக நேரிடும்.

இலங்கையின் மிகப் பெரிய
—நகை—
வியாபாரிகள்
= O =
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
ஸ்தாபனம்:
63, கன்னாதிட்டி.
யாழ்ப்பாணம்.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE
நல்லவாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் ஐக்கியஸாபநிதி
1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.
மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.
தினசரிப்பற்றுவரவு.
எச்சமிதி சாரசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.
தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்தி ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.
உண்டியல்கள்.
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாசகவுமான விசேஷ ஒழுங்கு[illegible]யப்பட்டிருக்கின்றன.
இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.
கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.
S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிறுப்பர்.

திறமான
தேக்க மரங்கள்
பல தினிசுகளிலும்
திறமான
குணிமார்க்ஓடுகள்
13½, 14 இஞ்சிகளிலும்
வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்
சேகரம் & சன்ஸ்
Std. 2 ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

சாலாமிஸ்ரி லேகியம்
இதனுல் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். தேகபுஷ்டி, வஜ்ரம், பலம் முதலானவை உண்டாகும்.
ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிசயமாய்க் காணுதலால் சேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.
ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50, கால்றுத்தல் விலை ரூபாய் 6-75
வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.
வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.
சிவஞான பற்பொடி
சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், முரசு கரைதல், முரசுல் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.
டொட்டணம் 1-க்கு விலை சதம் 25
K. ஆறுமுகம்பிள்ளை
எமது விலாசம்: [illegible]
M 196 1-2—30-4-52. கோட்டைமுனை, மட்டக்களப்பு.

# மகாவலி நீரைப் பெற யோசனை

## நல்லூர்க் கிராமச்சங்கத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்

1-3-1952 சனிக்கிழமை நடைபெற்ற நல்லூர்க் கிராமச் சங்கத்தின மாதாந்தக் கூட்டத்தில், கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேறப்பட்டன.

1. இலவசக்கல்வித்திட்டத்தை அரசாங்கம் அமுல் நடத்திக்கொண்டிருக்கும், பாடசாலைகள், கல்லூரிகள் மாணவர்களிடமிருந்து சம்பளம் (facilities fees) அறவிடுவதை இச்சங்கம் பலமாகக் கண்டிக்கிறதென்றும், இதை அரசாங்கத்துக்குத் தெரிவிக்கும்படியும், மாணவர்களுக்குக் கொடுக்கும் இலவசப் போஜனமாகிய பாண் அதிகேவலமானதென்றும் அப்பாண் பிள்ளைகளுக்குப் போதாமலிருக்கிறதென்றும், ஆகவே ஒரு பிள்ளைக்கு 15 சத வீதம் உயர்த்த வேண்டுமென்றும் இச் சங்கம் தீர்மானிக்கின்றது.

2. ஐந்துக்கும் அதற்கு மேற்பட்ட வருடங்களுக்கு மேல் அந்நிய நாட்டின் தொடர்பை விட்டு இலங்கையில் நிரந்தரப் பிரசைகளாக இருப்பவர்களை இந்நாட்டின் பிரசைகளாக அரசாங்கம் நியமித்துக்கொள்ள வேண்டுமென்று இச் சங்கம் தீர்மானிக்கின்றது.

3. இலங்கையில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாயிருப்பதால் இந்நாட்டிலுள்ளவர்கட்கு முதல் வேலைகள் கொடுத்து அதன் பின்புதான் அன்னிய நாட்டிலுள்ளவர்கட்கு வேலைகள் கொடுக்க வேண்டுமென்றும் சங்கம் தீர்மானிக்கின்றது.

4. யாழ்ப்பாணத்தில் ஆறு இல்லாதபடியால், மகாவலிகங்கையை யாழ்ப்பாணத்துக்கு வருவித்து இங்குள்ள மக்களுக்குக் கமச் செய்கைகளுக்குப் பயன் அளிப்பிக்க வேண்டுமென்றும் இச் சங்கம் தீர்மானிக்கின்றது.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponna, Jaffna on Tuesday. March 11, 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org